# திருநங்கைகளின் விளிம்புநிலை வாழ்வியல்

**ஜெ.அபூர்வஜென்னி**

**முனைவர்பட்டாஆய்வாளர்,**

**இலக்கியத்துறை,தமிழ்ப் பல்கலைக்கழகம்தஞ்சாவூர்-10**

## ஆய்வுச்சுருக்கம்

மனிதன் தன் உள்ளத்து உணர்வுகளையும் எண்ணங்களையும் மற்றவர்க்கு அறிவுறுத்த மொழியைப் படைத்து கொண்டான். இதனால் தான் மொழி நூலார் “மக்கள் மனதின் பிரதிபலிப்பே மொழி” என்று கூறுவர். “மொழி வாயிலாக வாழ்க்கையை உணர்த்துவதே இலக்கியம்” என்று ஹட்சன் கூறுவது ஏற்புடையதாகும். ஆக, இலக்கியம் மனித வாழ்விலிருந்து முகிழ்ந்து, மனிதனை மகிழ்விப்பதும் உணர்விப்பதுமான தொழிலை ஆற்றுகின்றது எனலாம். அத்தகைய இலக்கியத்திலும், இலக்கணத்திலும் பல்வேறு அரிய, நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. பல உண்மைகளின் உறைவிடமாக இருக்கும். நம் படைப்புகளின் திருநங்கையரின் வாழ்வியலையும், அவர்கள் பெற்ற ஏற்றத் தாழ்வுகளையும் இக்கட்டுரையில் வழி அறியலாம். சமூகத்தில் உள்ள சராசரி மக்கள் அனைவரும் திருநங்கைகளை கேலிப் பொருளாகவும், போகப்பொருளாகக் கருதும் போக்கும் இல்லாமல் அவர்களையும் சகஜீவிகளாக அங்கீகரிக்கும் மனிதநேய உணர்வினை அனைவரும் வளர்த்து கொள்ள வேண்டும். அவர்களின் கோரிக்கைகளை சமூகமும், அரசும் செவிசாய்க்க வேண்டும்.

## *முக்கிய வார்த்தைகள்:*

**திருநங்கையர்கள்; பேடி,** பால் திரிந்தோர், சாமியாடி, மந்திரவாதி, குறிசொல்லுவோர், பூசாரிகள், துறவிகள், ஹிப்பிகன் படுதாதி, குருதாதா, நானாகுரு

**பயன்பட்டநூல்கள்**

1. அ.மார்க்ஸ், பொ.வேல்சாமி, விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும்.
2. பத்மபாரதி, திருநங்கையரின் சமூக வரைவியல்.
3. ரேவதி, வெள்ளைமொழி.
4. அ. மங்கை, அரவாணிகளும் மனிதர்களே.
5. தொல்.பொருள்.மெய்…, (பேரா. உரை)

**முன்னுரை**

உலகம் தோன்றி பன்னெடுங்காலம் கழிந்து விட்டது. மனிதன் தன் உள்ளத்து உணர்வுகளையும் எண்ணங்களையும் மற்றவர்க்கு அறிவுறுத்த மொழியைப் படைத்து கொண்டான். இதனால் தான் மொழி நூலார் “மக்கள் மனதின் பிரதிபலிப்பே மொழி” என்று கூறுவர். “மொழி வாயிலாக வாழ்க்கையை உணர்த்துவதே இலக்கியம்” என்று ஹட்சன் கூறுவது ஏற்புடையதாகும். ஆக, இலக்கியம் மனித வாழ்விலிருந்து முகிழ்ந்து, மனிதனை மகிழ்விப்பதும் உணர்விப்பதுமான தொழிலை ஆற்றுகின்றது எனலாம். அத்தகைய இலக்கியத்திலும், இலக்கணத்திலும் பல்வேறு அரிய, நல்ல கருத்துக்கள் இருக்கின்றன. பல உண்மைகளின் உறைவிடமாக இருக்கும். நம் படைப்புகளின் திருநங்கையரின் வாழ்வியலையும், அவர்கள் பெற்ற ஏற்றத் தாழ்வுகளையும் இக்கட்டுரையில் வழி அறியலாம்.

**நன்னூல் சுட்டும் திருநங்கையர்கள்**

தொல்காப்பியத்தின் வழி நூலான நன்னூல் பவணந்தி முனிவரால் இயற்றப்பட்டது. முதல் நூலுக்கும் வழிநூலுக்கும் கால இடைவெளி அதிகமாக உள்ளது. எனினும் திருநங்கையரைப் பற்றி பேசும்போது,

**பெண்மைவிட்டுஆண் அவாஅவ பேரு ஆண்பால்**
**ஆண்மைவிட்டு அல்லாது அவாவுவ பெண்பால்**
**இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்**

என்ற நூற்பாவில் பெண் தன்மை விட்டு ஆண் தன்மை மிகுந்திருந்தால் ஆண்பேடு என்றும், ஆண் தன்மை மிகுந்திருந்தால் பெண்பேடு என்றும், இவ்விரு தன்மையும் உயர்திணையில் இருந்தாலும் அஃறிணையை ஒத்திருக்கும். இரண்டு திணையிலும், ஐம்பாலிலும் இவர்களைச் சேர்ந்திருந்தாலும் உரிய இடத்தைச் சுட்டவில்லை என்பது புலனாகிறது. இவர்களை “பால் திரிந்தோர்” என்று தொல்காப்பியம் கூறியதிலிருந்து சற்று வேறுபட்டு “பேடு” என்று அழைக்கிறார் பவணந்தியார்.

**தொல்காப்பியம்சுட்டும் திருநங்கையர்**

தமிழின் முதல் இலக்கண நூலாகவும் இலக்கியத்தின் இலக்கணம் கூறும் நூலாகவும் அமைவது தொல்காப்பியம்,

**பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியுமந் தந்தமக் கிலவே**
**உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்**

என்று கூறுகிறது.



© 2023, IRJTSR 

ஒருவன் உயர்திணை இடத்துப் பெண்பாற்குரிய அமைதித் தன்மையைத் கருதுவதற்குக் காரணமான, ஆண்பாற்குரிய ஆண் தன்மை திரிந்த பெயர் பொருளும், தெய்வத் தன்மையைக் குறித்த பெயர்ப் பொருளும் இவையெனத் தம் பெயர்ப் பொருளினை வேறறிய நிற்கும் ஈற்று எழுத்தினையுடைய சொற்களைத் தமக்குடைய அல்ல. உயர்திணை பாலாய் வேறுபட்டு நிற்கும்.

அலியன்று என்பதற்குப் 'பெண்மை சுட்டிய' என்றார். 'பெண்ணன்று' என்பதற்கு 'ஆண்மை திரிந்த' என்றார். பேடியைப் பாலுள்ளும், தெய்வத்தைத் திணையுள்ளும் அடக்கினார் என்று கூறப்பட்டுள்ளது.

**தொன்னூல் சுட்டும் திருநங்கையர்கள்**

**பெண் ஆண் தன்மை திரிபெயர் ஆடூய்**
**ஒழிந்த உயர்திணை இருபால் ஏற்கும்**

என்று பிற்கால இலக்கண நூலான தொன்னூல் சுட்டுகிறது. ஆண், பெண் என்ற இரு தன்மையுற்ற திருநங்கையர்களை அஃறிணைப் பால்களான ஒன்றன்பால், பலவின்பால் என்ற இரண்டு பால்களிலும் கூறலாம். ஆக திருநங்கையரைப் பற்றிய புதிய செய்திகளைக் கூறாமல். முன்னோர் கூறிய செய்திகளையே பதிவு செய்துள்ளது.

**திருநங்கையர் இலக்கணம்**

இலக்கண நூல்களின் வாயிலாகத்தான் ஆண், பெண் பாலினங்களுக்கான வரையறைகளையும் விளக்கத்தையும் தெரிந்து கொள்ள முடிகிறது. இதே போன்று மூன்றாம் பாலினத்தவராகக் கருதப்படும் திருநங்கைகளுக்கு வரையறை கூறப்பட்டுள்ளதா என்று பார்க்கின்ற பொழுது நிகண்டுகளிலிருந்து இதற்கான முழு விளக்கத்தையும் பெறமுடிகிறது.

**பேடி இலக்கணம் பேசுங்காலை**
**நச்சுப் பேசலும், நல்லுரை ஓர்தலும்**
**அச்சுமாறியும், ஆண்பெண் ஆகியும்**
**கைத்தலம் ஒன்றைக் கடுக வீசுயும்,**
**மத்தகத்து ஒருவகை மாண்புற வைத்தலும்**
**விலங்கி மதித்தும் விழிவேறு ஆகியும்**
**துளங்கித் தூங்கிச் சுழன்று துனித்தும்**
**நாக்கு நாணியும், நடம்பல பயின்றும்**
**பக்கம் பார்த்தும், பங்கி திருந்தியும்**
**காரணம் இன்றிக் கதம்பல கொண்டும்**
**வார் அணி கொங்கையை வலிய நலிந்தும்**
**இரங்கியும், அழுதும், அயர்ந்தும், அருவருத்தும்**
**குரங்கியும், கோடியும், கோதுகள செய்தம்**
**மருங்கில் பாணியை வைத்தும் வாங்கியும்**
**இரங்கிப் பேசியும், எல்லேல் என்றும்**

**இன்னவை பிறவும் இயற்றுதல் இயல்பே**

திருநங்கைகள் உள்ளத்தளவில் பெண்ணாகவும் உடலளவில் ஆணாகவும் இருப்பதால் வரையறை செய்வதில் சிக்கல்கள் இருந்தாலும் அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதற்குச் சரியானதொரு விளக்கத்தைத் திவாகர நிகண்டு கூறுவதாக வெ. முனிஷ் கூறுகின்றார்.

**விளிம்புநிலைமக்கள்**

விளிம்புகள் ஒரு படித்தானை அல்ல. ஒற்றைக் கருத்தியல் கொண்டவையும் அல்ல. “விளிம்பு” என்பது ஒரு ஒப்பீட்டான கருத்தாக்கமும் கூட. சங்க படிநிலை அமைப்பில் கடைநிலையில் உள்ள மக்களைக் குறிக்கும் சொல்லாடல் விளிம்புநிலை மக்கள் (marginalized people) மேல் × கீழ்; உயர்வு × தாழ்வு என்பன போல் மையம்× விளிம்பு என்பதும் இரட்டை எதிர்நிலை ஒரு மையத்திற்கு விளிம்பாக இருக்கும் ஒன்று அதனினும் விளிம்புடன் ஒப்பிடும் போது மையமாக செயல்படுகின்ற வாய்ப்பும் உண்டு. விளிம்புகளிடையே இத்தகைய வேறுபாடுகள் இருந்த போதிலும் மையத்தை எதிர்ப்பது மையத்திலிருந்து விலகுவது என்கிற அடிப்படையில் அவற்றின் பொதுக்கூறு அமைந்திருக்கும். மையம் விளிம்பு என்பன இங்கு உருவங்கள். சமூகத் தளத்தில் மையமாக விளங்கும் சக்தி வலுவானது. அதிகாரத்தைப் பயன்படுத்தி தன் கீழ் உள்ள மற்றவர்களை சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தளங்களில் ஒடுக்குகிறது. ஓரம் கட்டுகிறது விளிம்பு நிலைக்கு தள்ளுகிறது.

**விளிம்புநிலை - கருத்தாக்கம்**

முதன் முதலில் விளிம்பு நிலைக் கருத்தாக்கத்தை மானிடவியல் அறிஞர் விக்டர் டர்னர் என்பவர் அறிமுகப்படுத்துனார். இவர் பயின்ற காலத்தில் அமைப்பியல் – செயற்பாட்டியல் விளக்கங்கள் குறைபாடாகத் தோன்றின. “என்டெம்பு” சமூகத்தை ஆராய்ந்த இவர் பரஸ்பர உறவுக் கொண்ட அமைப்புக்கு அப்பால் சமூகம் என்ற ஒன்று செயல்படுவதை இனம் கண்டார். சடங்கியல் களத்தில் மீவியலர்கள் இயல்பு உலகத்திலிருந்து தங்கள் தகுதி, பங்கு, பணிகள் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதால் அமைப்பு என்பது அடையாளமின்றிக் கரைந்து விடுகிறது. மாறாக எதிர் அமைப்பு தோன்றுகிறது.

எதிர் அமைப்பில் இயங்கும் புறவய மனிதர்கள் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ சமூக அமைப்பு நிலைக்கு மாறாக எதிர் அமைப்பினை ஏற்படுத்துகின்றார்கள். இந்த புறவய மனிதர்கள் பலதரபட்டவர்கள். சாமியாடி, மந்திரவாதி, குறிசொல்லுவோர், பூசாரிகள், துறவிகள், ஹிப்பிகன் என்ற வகையில் அமைகிறார்கள்.

**விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல்**

சமூகத்தில் விளிம்பு நிலையினர் என்றும் தனித்த பிரிவினரையும் பர்னர் இனங்கண்டுள்ளார். இவர்கள் மேற்கூறிய புறவயத்தாரிடமிருந்து வேறுபட்டவர். விளிம்பு நிலை மக்கள் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட குழுவின் பேராளர்களாக இருப்பர். அதனோடு அவர்கள் சமூகம், பண்பாட்டு நிலையில் தனித்தன்மையுடன் விளங்குவர். தாங்கள் தாழ்ந்த பிரிவிலிருந்து தோன்றியவர்கள் என்ற நிலை ஒரு

புறமிருக்க நடைமுறையில் அமைப்புக்கு எதிராக மீ சமூகம் கட்டமைக்கின்ற பண்பைக் கொண்டிருப்பதன் மூலம் தங்களை உயர்ந்த குழுவினராகக் கருதிக் கொள்ளும் சுபாவம் கொண்டவர்கள் எழுத்தாளர்கள், கலைஞர்கள், தத்துவவாதிகள், ஆகியோர் விளிம்பு நிலையினராக அமைகின்றனர்.

மானிடவியல் பேரறிஞர் பர்னர் வரையறுத்த விளிம்பு நிலை கருத்தாழங்கள் சங்க காலச் சமூக, பண்பாட்டு வரலாற்றில் வாழ்ந்தோருக்கும் பொருந்தும். அந்நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவும் நாடோடித் தன்மைக் கொண்டவர்களாகவும், கலைஞர்களாகவும், தத்துவாதிகளாகவும் பலர் வாழ்ந்து வந்தனர். குறிப்பாக, வறுமையில் வாடிய புலவர்கள், பாணர், பாடினி, கூத்தர், பொருநர், பரத்தையர், பார்ப்போன், கண்போர், விருந்தினர் போன்றோர் மேற்கூறிய கருத்தாக்கத்திற்கு உரியவர்களாக உள்ளனர்.

**சங்ககலைச்சமூக அமைப்பியலில்விளிம்பு நிலை மக்கள்**

சங்க காலச் சமூகம் ஏறக்குறைய கி.பி.300 முதல் கி.பி.200 வரையிலான காலக்கட்டத்தில் பல நிலை வளர்ச்சிகளால் வேறுபட்ட பல சமூக அமைப்புகளுடன் விளங்கிறது. பேரரசு வளர்த்த பெருவேந்தர் மையச் சமூகம் குறுநில மன்னர்கள் அரவணைப்பால் கட்டிக்காக்கப்பட்ட இனச் சமூகம், நிலக்கிழார்களின் அதிகார எல்லைக்குட்ப்பட்ட வேளாண் சமூகம், பழைய இனக்குழு வாழ்கையின் எச்சங்களுடன் சமூக மாற்ற இயங்கியலுக்குப் பெரிதும் ஆட்படாமல் வெளியே இயங்கிய தொல்திணை மாந்தர் சமூகம் எனப் பல நிலை அமைப்புகளைக் கொண்டிருந்தது.

**திருநங்கை ரேவதியின்பள்ளி பருவம்**

எங்க அம்மா அப்பாவுக்கு நான் தான் கடைசி மகன் பேரு துரைசாமி. எனக்கு மூணு அண்ணன்களும் ஒரு அக்காவும் இருக்காங்க. எங்க அப்பா லாரி டிரைவராகவும் மூத்த அண்ணன் கிளீனராகவும் இருந்தாங்க. நான் பள்ளிக்கூடம் போறப்ப பொம்பள புள்ளைங்கக் கூடத் தான் போவேன். பொம்பளப் புள்ளைங்க விளையாடுற விளையாட்டத் தான் விளையாடுவேன். அந்த வயசுல வாசக்கூட்டி சாணம் தெளிச்சு கோலம் போடுவேன். அம்மாவுக்குத் தொணையா வீடு பெருக்கி பாத்திரம் கூடக் கழுவி கொடுப்பேன்.

பள்ளிக்கூடம் முடிஞ்சு வீட்டுக்கு வந்தா அக்காவோட பாவடை சட்டைய எடுத்துப் போட்டுகிட்டுத் துண்டை தலையில முறுக்கி நீட்டச் சடையாத் தொங்க விட்டுகிட்டு கல்யாண பொண்ணு கணக்கா நடந்து காட்டுவேன். பள்ளிக்கூடத்துல படிக்கிற பசங்க, அக்கம் பக்கம் இருக்குற ஆம்பள, பொம்பளங்க என்னை ஒம்போது, பொம்பள சட்டி, பொட்டையான்னு கூப்பிடுவாங்க. நீ ஆம்பள தானே ஏன்டா பொம்பள மாதிரி நடந்துகிற. பொம்பளத் துணியப் போடுறேன்னு கேலி பண்ணுவாங்க.

எனக்கு தோணுச்சு, புரிஞ்ச்சு நான் அப்படிதான்னு என்று பள்ளிப் பருவத்திலேயே தன் உணர்வு நிலை வெளிப்பட்டதை ரேவதி பதிவு செய்கிறார்.

**பெண் தன்மை உணர்தல்**

திருநங்கைகளின் செயல்பாடுகள் மூலம் அவர்களின் உணர்வு நிலையினை அறிந்து கொள்ள முடியும். சிறுவயதில் இருந்தே இயல்பாகவே அவர்களிடம் பெண் தன்மை இருப்பதனை உணர முடியும். அந்த வகையில் ரேவதி தன் பள்ளி பருவத்தில் நடந்த நிகழ்வினை,

“அது கொஞ்ச நாளைக்கு எனக்குள்ளே சந்தோஷத்தக் கொடுத்தாலும் ஆம்பளைங்க மேல இருக்கிற மோகம், காதலை என்னாலக் கட்டுப்படுத்த முடியல. நான் ஆம்பளையாப் பொறந்தேன். ஒரு பொம்பளையைத் தானே ஆசப்படனும் நான் மட்டும் ஏன் ஆம்ளைங்கள நேசிக்கிறேன்? எனக்கு என்ன பைத்தியமா? வியாதியா?நான் மட்டும் தானா இப்படி இருக்கேன்? இல்லை என்னை மாதிரி இன்னும் இருப்பாங்களா? இப்படிப்பட்டக் கேள்விகள், குழப்பங்கள், சந்தேகங்கள் என்னோட மனசுல இருந்துக்கிட்டே இருக்கு.

ஒரு வழியாக நான் பத்தாம் வகுப்பு வந்தேன். அந்த வயதில் என்னுள் மாற்றங்கள் தோன்றின. அடக்க முடியாத பெண் உணர்வு என்னை நித்தம் வாட்டி எடுத்தது. என்று பெண் உணர்வு நிலை வெளிப்பட்டதை ரேவதி அவர்கள் வெள்ளைமொழியில் குறிப்பிடுகின்றார்.

ஒரு போலீஸ் அடித்த பின் இன்னொரு போலீஸ் ஷீகால்களால் உதைத்தார். சாமி சாமி இனிமேல் இந்த பக்கமே வரமாட்டேன். என்னை விட்டுடுங்க” என்று கத்தினேன். அதில் ஒரு கைதியும் இருந்தான். அவனைக் காட்டி அவனுடன் உன்னை அந்த அறையில் போடுகிறேன். உன் இஷ்டம் போல் இரு என்று போலீஸ் கூற நான் கத்த ஆரம்பித்து விட்டேன். பலவந்தமாக என் துணிகளை ஒன்று விடாமல் கழற்றி விட்டு லாட்டியால் அடித்தனர். இரவில் நடந்ததை எல்லாம் நினைத்து கண்ணீர் வடித்தேன். துப்பாக்கியை எடுத்து சுட்டு இறந்து விடலாம் என்று தோன்றியது.

இந்த நிலையை உணரும் போது காவல் துறையின் அதிகாரம் என்னும் நச்சு தொப்பி தலையில் ஏறி எந்த அச்சமும் இல்லாமல் எல்லாக் குற்றங்களையும் செய்கிறது என்பதனை குறிப்பிடுகின்றார்.

**திருநங்கையரின்உறவு முறைகள்**

திருநாங்கையரின் உறவு முறைகள் என்று பார்த்தால் அம்மா, மகன், பேத்தி, கொள்ளுபேத்தி, பால்மகள் என்பன போன்ற உறவு முறைகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| படுதாதி | - | ஆயாவின் குரு |
| தாதாகுரு | - | குருவின் ஆயா |
| நானாகுரு | - | குருவின் குரு |
| குரு | - | அம்மா |
| காலாகுறு | - | குருவின் சகோதரி |

| | | |
|---|---|---|
| குருபாய் | - | சகோதரி |
| சோட்டாகுருபாய் | - | சிறிய சகோதரி |
| சேலா | - | மகள் |
| நாத்திசேலா | - | பேத்தி |
| சந்தி சேலா | - | கொள்ளும் பேத்தி |
| சடக்காத்தி | - | கொள்ளுப் பேத்தியின் மகள் |

என்பன போன்ற உறவுமுறைகள் காணப்படுகின்றன.

**திருநங்கைகளின்காதல்**

திருநங்கைகள் பெரும்பாலும் ஆடவரையே விரும்புவர். அந்த வகையில் ரேவதிக்கும் காதல் ஏற்பட்ட தருணத்தை பதிவு செய்கின்றார்.

“இருவரும் ஒன்றாக ஆபிஸ் செல்வது அவருடன் மற்ற குடும்பப் பெண்களைப் போல வாழ்ந்து வந்தது. மகிழ்ச்சியாக இருந்தது. இரவு உணவு தயாரித்து அவர் வரும் வரை காத்திருப்பேன். எனக்குப் பசி எடுத்தாலும் அவருடன் சேர்ந்து சாப்பிடுவதையே விரும்புவேன். அவர் ஆபிசில் வேலை செய்து கொண்டிருந்தால் நேரமாகி விட்டது என்று போன் செய்வேன். இதோ அரைமணி நேரத்தில் வந்து விடுகிறேன் என்பார்.

அவரோ ‘உன்மீது நானும் என்மீது நீயும் டிபன்டாக இருக்கக் கூடாது என்று என்னை வேலையைத் தொடர்ந்து செய்யச் சொல்லி விட்டார் என்று தனது காதல் நிகழ்வையும் பதிவு செய்கிறார்.

**சங்கமா அமைப்பும் போராட்டமும்**

சங்கமா பாலினச் சிறுபான்மையினரின் உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கியது. பாலினச் சிறுபான்மையரில் அதிகம் பேர் ஏழைகளாகவே உள்ள ஆங்கிலம் தெரியாத, கோத்திகள், இஜராக்கள். ஓரினச் சேர்க்கையாளர்கள் ஆகியோர் அடங்குவர். ஆண் – பெண் மீதான அடக்கு முறைகள் பற்றிய கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், சினிமா திரையிடுதல், பொதுக் கூட்டங்களில் உரையாற்றுதல் எனப் பல வழிகளில் சங்கமா சிறுபன்மையினரின் மீதான பொதுமக்களின் தவறான கருத்துகளை நீக்கி சம அந்தஸ்துடன் வாழ வைப்பது சங்கமாவின் நோக்கமாகும்.

ரேவதியின் மகள்களான மயூரி, பாமிளா இவர்களின் மூலமாக சங்கமாவின் சேர்த்து தன்னையும் இணைத்துக் கொண்டு பெங்களூரு இஜராக்களின் உரிமைகளுக்காகவும் ஓரினச் சேர்க்கையாளர்களின் உரிமைகருத்தாகவும், வரதட்சனைக் கொடுமைகள், இந்து – முஸ்லீம் வன்முறைகளை எதிர்த்தும், குழந்தை தொழிலாளர்களின் நலனுக்காவும் குரல் கொடுத்து இதர தொண்டு நிறுவனங்களுடன் போராடத் தொடங்கினார்.

**முடிவுரை**

பெண்ணாக வாழப் போராடும் திருநங்கையரின் தன் வரலாறானது. பெண்ணாகத் தன்னை உணர்ந்தது முதல் இவரது போராட்டம் தொடங்கி தம்மை ஒத்தவர்களைக் கண்டறிந்து அவர்களோடு சேர்ந்து அவர்களின் கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்து பாலியல் தொழில் செய்து தம்மை புரிந்து கொள்ளாமல் வெறுத்தும் ஒதுக்கியும் கொடுமை செய்த குடும்பம் மற்றும் காவல்துறை வரையிலும், தான் விரும்பியவைளின் அன்பு பாதியில் முடிந்து போன நிலை என எல்லாத் தரப்பினரையும் கடந்து பாலினச் சிறுபான்மையினர் பற்றிய புரிதல் கொண்டவர்களோடு தன்னை இணைத்துக் கொண்டது என பலதரப்பட்ட அனுபவங்களை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.

சமூகத்தில் உள்ள சராசரி மக்கள் அனைவரும் திருநங்கைகளை கேலிப் பொருளாகவும், போகப்பொருளாகக் கருதும் போக்கும் இல்லாமல் அவர்களையும் சகஜீவிகளாக அங்கீகரிக்கும் மனிதநேய உணர்வினை அனைவரும் வளர்த்து கொள்ள வேண்டும். அவர்களின் கோரிக்கைகளை சமூகமும், அரசும் செவிசாய்க்க வேண்டும். முன்னையக் காலங்களில் திருநாங்கைகளை மதிக்காத நிலைமாறி இன்றைய சூழலில் சில உரிமைகள் வழங்கப்பட்டதும். அவை போதுமானதாக இல்லை என்பது தான் நிதர்சனமான உண்மையாக அமைகின்றது.

**பயன்பட்டநூல்கள்**

[1] அ.மார்க்ஸ், பொ.வேல்சாமி, விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும்.

[2] பத்மபாரதி, திருநங்கையரின் சமூக வரைவியல்.

[3] ரேவதி, வெள்ளைமொழி.

[4] அ. மங்கை, அரவாணிகளும் மனிதர்களே.

[5] தொல்.பொருள்.மெய்..., (பேரா. உரை)

[6] அ.மார்க்ஸ், பொ.வேல்சாமி, விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும்.

[7] பத்மபாரதி, திருநங்கையரின் சமூக வரைவியல்.

[8] ரேவதி, வெள்ளைமொழி.

[9] அ. மங்கை, அரவாணிகளும் மனிதர்களே.

[10] தொல்.பொருள்.மெய்..., (பேரா. உரை)

[11] கு.வெ.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்,

[12] சு. சமுத்திரன் வாடாமல்லி

[13] வ. ஆறுமுகம், அரவான் களபலி.

[14] தி. பாக்கியமுத்து (ப.ஆ), “முன்னுரை”, தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டங்களும்.

[15] அ.மங்கை, எதிரொலிக்கும் கரவொலிகள் அரவாணிகளும் மனிதர்களே.

[16] மகாராசன், அரவாணிகள்.

[17] ரேவதி (தொ.ஆ) உணர்வும் உருவமும்.